[1987 ஏப்ரல் 9

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் அருகில் கிட்டத்தட்ட 11 கிணறுகள் தோண்டப்பட்டதாக இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தவகையில் கச்சா எண்ணெய் எத்தனை கிணறுகளிலிருந்து எடுத்தார்கள்? விஷ வாயு மூடப்பட்ட கிணறுகள் எத்தனை?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரி கிணறுகளைத் தோண்டும்போது முதலில் எரி வாயுதான் வரும். பிறகு எண்ணெய் கிடைக்கும். அதுபற்றிய சரியான குறிப்பு இப்போது என்னிடத்தில் இல்லை. ஆனால் ஏற்கெனவே எடுக்கப்பட்ட எண்ணெய் இங்கே சுத்தி கரிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். ஆனால் அந்த எண்ணெய் தரமானதாக, உயர்ந்த தாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல் கேள்வி முடிவடைய, உங்களைத் திருப்திப்படுத்த 17 நிமிடம் ஆகியிருக்கிறது.

பாலாற்றுக் குடிநீர் விஸ்தரிப்புத் திட்டம்.

347—(* வினா எண் 2889) திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலாற்றிலிருந்து குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தை குரோம்பேட்டைக்கு அருகில் உள்ள லட்சுமிபுரத்திற்கும் விரிவு படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது குடிதண்ணீர் வழங்கப் படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ): திருநீர்மலை பேரூராட்சியைச் சேர்ந்த லட்சுமிபுரம் குடியிருப்புக்கு ஆலந்தூர்—பல்லவபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு தற்போது இல்லை. ஆயினும், லட்சுமிபுரத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க விரிவானதொரு திட்டத்தை ஆய்வு செய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

1987 ஏப்ரல் 9]

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த லட்சுமிபுரம் என்பது திருநீர்மலை பேரூராட்சிக்கு உட்பட்ட ஒரு குன்றின் மீது அமைந்துள்ள பகுதியாதலால் அங்கே கிணறுகள் எடுத்தாலும் தண்ணீர் வருவதில்லை. ஆழ் குழாய் போட்டாலும் தண்ணீர் கிடைப்பதில்லை. இந்த நிலையில் அந்தப் பகுதியில் வாழ்கின்ற சுமார் 4000 மக்கள் தண்ணீர் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டிலிருந்தே, உடனடியாக அவர்களுக்குக் குடிநீர் கொடுக்க அரசு நிரந்தர நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல லட்சுமிபுரம் பகுதியில் வாழ்கின்ற மக்கள் தொகை 4,500. அங்கு ஒரு மினி மோட்டார் பொருத்தப்பட்ட ஆழ் குழாய்க் கிணறு, திறந்த கிணறு ஒன்று, ஆக இரண்டு கிணறுகள் மூலமும் அதோடு 4 மார்க்—2 கைப் பம்பு பொருத்தப்பட்ட குழாய்கள் மூலமும் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இருந்தாலும் அந்த மக்களுக்கு தண்ணீர் போதவில்லை என்பதை அரசு அறிந்து அவர்களுக்காக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க விரிவானதொரு திட்டத்தைக் கொண்டுவர அரசு உத்தேசித்துள்ளது.

திரு. எல்ல இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பம்மலில் உள்ள அண்ணா நகர் மற்றும் ஸ்டேட் பாங்க் காலனி வரை மக்களுக்கு பலனளிக்கும் ஆலந்தூர்—பல்லாவரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை பொழிச்சலூர் ஊராட்சிக்கும், அதற்கு அருகேயுள்ள கவுல்பஜார் பகுதிக்கும் விஸ்தரிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர்—பல்லாவரம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் 5 லட்சம் மக்களுக்கு குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும் அதனை அதிகமான இடங்களுக்கு விரிவாக்க தற்போது வசதி கிடையாது. அதற்கு போதுமான தண்ணீரும் கிடையாது. இருக்கிற தண்ணீர் இப்போது கொடுக்கப்படுகிற மக்களுக்குத் தான் போதுமானதாக

உள்ளபடியால் அந்தத் திட்டம் அந்த வகையில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. எனவே, அதை விரிவாக்க தற்போது வசதியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்மநாபபுரம் நகருக்குக் குடிநீர் வழங்கல்.

348—(* வினா எண் 4514) திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் நகருக்குக் குடிநீர் வழங்க அரசிடம் புதுத்திட்டம் ஏதாகிலும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) பத்மநாபபுரம் நகராட்சிக்கு குழித்துறை ஆற்றை ஆதாரமாகக் கொண்டு புதிய குடிநீர்த் திட்டம் உருவாக்க தேவையான ஆய்வுப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குடிநீர்த் திட்டத்தை இந்த நடப்பாண்டிலேயே மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எதையாவது இந்த அரசு மேற்கொண்டிருக்கிறதா?

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் நகராட்சிக்கு குழித்துறை ஆற்றை ஆதாரமாகக் கொண்டு, புதிய குடிநீர்த் திட்டம் உருவாக்க தேவையான அளவு பணிகள் நடைபெற்று வருகின்றன. அங்கே இருக்கிற நகராட்சியை, இதை ஆய்வு செய்வதற்காக 78,000 ரூபாய் பணம் கட்டச் சொல்லும்படி நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மொத்தமாக எற்படுகிற செலவோடு அதையும் சேர்த்துக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறோம்.